*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*12 08 2025 TUESDAY 12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

1. *நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவிநீக்கம் குறித்து ஆய்வு செய்ய மூவர் குழு அமைக்கப்பட்டுள்ளதாக மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.*

2. *ஒற்றுமையின் அடையாளமாக இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கம் திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.*

3. *நவீன தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்தி யானைகளை பாதுகாக்க உறுதியேற்போம் என்று மத்திய வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.*

4. *நடப்பாண்டில் செயற்கை நுண்ணறிவு சார்ந்த புத்தொழில்களில் 524 மில்லியன் டாலர் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

5. *Saipan சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Ananya Praveen காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*<<<<<<>>>>>>*

*நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவிநீக்கம் குறித்து ஆய்வு செய்ய மூவர் குழு அமைக்கப்பட்டுள்ளதாக மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக, அவையில் இன்று விளக்கமளித்த அவர், பிஜேபி உறுப்பினர் திரு. ரவிசங்கர் பிரசாத் உள்ளிட்ட 146 உறுப்பினர்கள் கையெழுத்திட்ட பதவிநீக்க தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.*

*இதுகுறித்து, உச்சநீதிமன்ற நீதிபதிகள் இருவர் மற்றும் மூத்த வழக்கறிஞர் அடங்கிய குழு அளிக்கும் அறிக்கை அடிப்படையில், மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>>*

*அகில இந்திய சபாநாயகர்கள் மாநாடு வரும் 24ஆம் தேதி புதுதில்லியில் தொடங்குகிறது.*

இந்திய நாடாளுமன்றத்தின் முதலாவது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவைத் தலைவராக வித்தல் பாய் பட்டேல் பொறுப்பேற்றதன் நூற்றாண்டு நிறைவை கொண்டாடும் வகையில். இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தில்லி சட்டப்பேரவை வளாகத்தில் நடைபெறும் இந்த இரண்டு நாள் மாநாட்டை, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தொடங்கி வைக்கவுள்ளதாக தில்லி சட்டப்பேரவை தலைவர் திரு. விஜேந்தர் குப்தா தெரிவித்துள்ளார்.

மாநாட்டின் ஒரு பகுதியாக இதுதொடர்பான கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் வித்தல் பாய் பட்டேல் நினைவு அஞ்சல்தலை வெளியிடப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், மாநிலங்களவை துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஸ் சிங், மத்திய அமைச்சர்கள் திரு. கஜேந்தி சிங் ஷெகாவத், திரு. கிரண் ரிஜிஜு உள்ளிட்ட பலர் பங்கேற்கவுள்ளதாக திரு. விஜேந்தர் குப்தா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாட்டில் நடப்பாண்டில் செயற்கை நுண்ணறிவு சார்ந்த புத்தொழில்களில் 524 மில்லியன் டாலர் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, நாளேடு ஒன்றில் வெளியான கட்டுரையை பகிர்ந்துள்ள அவர், இந்த முதலீடு கடந்த 2021ஆம் ஆண்டுக்குப் பிறகு, 4 மடங்கு அதிகரித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆண்டின் முதல் 7 மாதங்களிலேயே, இந்த அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் இதுவே அதிகம் என்று அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

உலக யானைகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், உலகில் உள்ள மொத்த ஆசிய யானைகளில் 60 சதவீதம் இந்தியாவில் இருப்பது பெருமிதம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

*நம் நாட்டில், யானைகள் மரியாதைக்குரிய வகையில் போற்றப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.*

*செயற்கை நுண்ணறிவு சார்ந்த முன்னெச்சரிக்கை சாதனங்களை பயன்படுத்தி, மனிதர்களுக்கும், யானைகளுக்கும் இடையேயான மோதலை குறைத்து, அவற்றை பாதுகாக்க உறுதியேற்போம் என்றும் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.*

*தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தமிழகத்தின் இயற்கை மரபையும், வரலாற்றையும் செழுமைப்படுத்துவதில் யானைகளின் பங்களிப்பு அளப்பரியது என்று கூறியுள்ளார்.*

*கோவை, மதுக்கரையில் தமிழக வனத்துறை அமைத்துள்ள செயற்கை நுண்ணறிவு எச்சரிக்கை அமைப்பு காரணமாக, அப்பகுதியில் உள்ள ரயில் தண்டவாளத்தை யானைகள் பாதுகாப்பாக கடந்து செல்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*மேலும், முதுமலை தெப்பக்காட்டில், யானைப் பாகன்களுக்காக சுற்றுச்சூழலுக்கு உகந்த குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதையும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*யானைகளை பாதுகாக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக மாநில வனத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு தெரிவித்துள்ளார்.*

*(சவுண்ட் பைட் - சுப்ரியா 37 செகண்ட்ஸ்)*

*<<<<<<>>>>>>*

*சுதந்திர தினத்தை ஒட்டி, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தேசியக்கொடி பேரணி நடைபெற்று வருகிறது.*

*புதுதில்லியில், இன்று பாரத் மண்டபத்தில் தொடங்கி, இந்தியா கேட் வரை நடைபெற்ற இந்த பேரணியில் மத்திய அமைச்சர்கள் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத், திரு. கிரண் ரிஜிஜு, திரு. சஞ்சய் சேத், தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*

*நிகழ்ச்சியில் பேசிய மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத், தேசியக்கொடியில் உள்ள மூவர்ணம் நாட்டை ஒருங்கிணைப்பதுடன், நாட்டிற்காக தங்களது வாழ்க்கையை தியாகம் செய்தவர்களை நமக்கு நினைவுபடுத்துவதாகவும் கூறினார்.*

*வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய பயணத்தில் ஒற்றுமையின் அடையாளமாக இந்த பேரணி திகழ்வதாகவும் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்தார்.*

*ஜம்மு கஷ்மீரின் ஸ்ரீநகரில் Sher-e-Kashmir மாநாட்டு அரங்கிலிருந்து தொடங்கி, தாவரவியல் பூங்கா வரை நடைபெற்ற பேரணியை துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா தொடங்கி வைத்தார். இதில் முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

*ஹிமாச்சலபிரதேசத்தில், Kinnaur மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இந்தப் பேரணி நடைபெற்றது.*

*நாகாலாந்தின் Dimapur-ல் நடைபெற்ற பேரணியை அம்மாநில பிஜேபி தலைவர் திரு. பெஞ்சமின் யப்தோமி தொடங்கி வைத்தார்.*

*தமிழகத்தின் சேலத்தில் அஞ்சல் துறை சார்பில் நடைபெற்ற பேரணியில், அஞ்சலக ஊழியர்கள் பங்கேற்று, விழிப்புணர்வை ஏற்படுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(சவுண்ட் பைட் – விஜயகுமார் 44 செகண்ட்ஸ்)*

*<<<<<>>>>>>*

*சர்வதேச இளையோர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.*

*இளையோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் இந்நாளில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*<<<<<>>>>>>*

*இளைஞர்களுக்கு திறன் பயிற்சிஅளித்து அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.*

*தமிழகத்தின் கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற பிரதமரின் தொழில் பழகுநர் சேர்க்கை முகாமில், பல்வேறு தொழில் நிறுவனங்கள் பங்கேற்று இளைஞர்களை தேர்வு செய்துள்ளதாக மாவட்ட திறன் பயிற்சி உதவி இயக்குநர் திரு. சிவ நடராஜன் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – சிவ நடராஜன் 32 செகண்ட்ஸ்)*

*<<<<<>>>>>>*

***Saipan* சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் *Ananya Praveen* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.**

***Northern Marianas*-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் *15-9, 15-9* என்ற செட்கணக்கில் ஜப்பானின் *Hirari Mizui*-யை வென்றார்.**

***<<<<<<>>>>>>***

**இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத், காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.**

**ஆடவர் ஒற்றையர் பிரிவு, முதல் சுற்று ஆட்டத்தில் அவர், *4-6, 6-3, 6-4* என்ற செட்கணக்கில் ஜப்பானின் *Kokoro Isomura*-வை வென்றார்.**

***<<<<<<>>>>>>***